பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 21 | தை 3 | ஸபர் 28 | இதழ் 339

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 17-1-80

புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 18-1-80
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### அமிரிடம் [illegible] கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ந. நவரத்தினத்தின் அரசியல் வாழ்விலும் அண்மைக்கால பாராளுமன்ற உரையின் அடிப்படையிலும் ''தமிழினத்தின் விடுதலைக் குரலாக' விளங்குகின்ற ஒரு பத்திரிகையின்

8-ம் பக்கம் பார்க்க

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1980-1-17 PERIODICALS DIVISION LIBRARY

# தி. மு. கழகத்துக்கு லோகசபை துணை சபாநாயகர் பதவி

## இந்திராகாங்கிரஸ் விருப்பம்:

### கழகத்தலைவர்கள் ஆலோசனை

(சென்னை)

லோகசபை துணை சபாநாயகர் பதவியை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்க பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி முன் வந்திருக்கிறார்,

இப்பதவியை திராவிடமுன்னேற்றக்கழகத்திற்கு வழங்குவது தொடர்பாக இந்திரா காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக்கழகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தி. மு. க தலைவர் திரு. மு. கருணநிதி நேற்று சென்னையில் கூறினர்,

இந்தவிஷயம் தொடர்பாக தி. மு. கழகத் தலைவர்கள் விரைவில் கூடி முடிவு எடுப்பார்கள் என்றும் அந்த முடிவு இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடத்துக்கு அறிவிக்கப்படும் என்றும் திரு. மு. கருணநிதி தெரிவித்தார்.

இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு லோகசபையில் அறுதிப் பெரும்பான்மைபலம் இருப்பதால் மத்திய மந்திரி சபையில் தி. மு. கழகம் சேர வேண்டிய அவசியமில்லையென்று திரு. கருணநிதி கூறினர்.

### எம். ஜி. ஆர். அழைப்பை தி. மு. க. ஏற்காது

தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திங்களன்று நடத்தவிருக்கும் அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் தி. மு. க. கழகம் கலந்து கொள்ளாது என்று திரு. கருணநிதி கூறினர்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களைத் தெரிந்து எடுப்பதற்கு வருமான உச்சவரம்பு சம்பந்தமான அரசின்உத்தரவு குறித்து விவாதிக்க இந்தக் கூட்டம் அழைக்கப்பட்டிருக்கின்றது.

பல்கேரிய கப்பல் பேரம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைசெய்ய சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரை நியமிக்கச் செய்வது குறித்து தமிழ்நாடு மத்திய

(8-ம் பக்கம் பார்க்க)

### சென்னை பஸ் விபத்து

## தி. மு. க- உறுப்பினரும் வேறு 4 பேரும் பலி

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவை தி. மு. க. உறுப்பினரும் வேறு நால்வரும் நேற்று பஸ் விபத்தொன்றில் மரணமானார்கள்.

நேற்று அதிகாலையில் உழுந்துப்பேட்டைக்கருகில் எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்றும் சுற்றுலா பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்த்த சங்கரன் கோயில் சட்டப் பேரவை உறுப்பினரான திரு. எஸ். சுப்பையாவே மரணமான எம். எல். ஏ. ஆவர்.

விபத்தில் காயமடைந்த 36 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்ப் பட்டனர்.

திரு. சுப்பையா பஸ்ஸில் தமது ஊருக்குப் போய்க் கொண்டிருந்தாராம்.

தி. மு. கழகத் தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ் செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க செயலகத்தின் முன்பாக நேற்றுப் பகல் சுமார் ஒருமணிநேர மறியல் ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.

அரசாங்க இலிகிதர் சங்கம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஸ்தலஸ்தாபன பொது ஊழியர் சங்கம் ஆசியவற்றின் யாழ் கிளைகளைக் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர். கொழும்பில் அரசாங்க ஊழியர்களின் விடுமுறை நாட்கள் குறைக்கப் பட்டதற்கு எதிரான தொழிற் சங்க ஆர்ப்பாட்டங்களில் தொழிற்சங்க தலைவர்கள் [illegible] ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. (கி)

### இன்று முதல்

## குடியிருப்பாளருக்கே இந்த வீடுகள் சொந்தம்

(கொழும்பு)

அரசுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான 25 ரூபாவுக்கும் குறைந்த வாடகையுள்ள வீடுகளை குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கும் திட்டம் இன்று முதல் அமுலுக்குவருகிறது.

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசாவின் ஏற்பாட்டின் கீழ் இந்தத் திட்டம் அமுலாகின்றது.

கொழும்பில் இந்த வீடுகளைக்குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கும் திட்டம் விசேஷ வைபவங்களுடன் ஆரம்பமாகும். நாடுமுழுவதிலும் 21 ஆயிரம் வீடுகள் இவ்வாறு குடியிருப்பாளர்களுக்குச் சொந்தமாக்கப்படும்.

### யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான 581 வீடுகள் இன்று அவற்றில் குடியிருப்பாளர்களுக்குச் சொந்தமாக்கப்படும்.

இன்று காலை யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். வீடுகையளிப்பு வைபவத்தில் யாழ்ப்பாண எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் நல்லூரர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு வீடுகளின் உறுதிகளை உரியவர்களிடம் கையளிப்பர். (கொ)

## செங்கொடிச் சங்கம் மகஜர்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் அநுபவித்துவந்த விடுமுறை நாட்களைக் குறைக்கும் தீர்மானத்தை வாபஸ்பெற தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களும் அநுபவித்து வந்த ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும்படியும் கோரி இலங்கைச் செங்கொடிச் சங்கத்தின் மத்திய கமிட்டி ஜனதி

8-ம் பக்கம் பார்க்க

டென் மார்க் பீட்றூட் விதைகள் (OHLSENS)
சிறு தொகையே இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது
தேவைக்கு முந்துங்கள்
சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்டெட்
23/2, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7236

புத்தம் புதிய கிடைத்தற்கரிய
HONDA மோட்டார் சைக்கிள்கள்
C D 185 NR - ROAD MASTER
விலைகள்
BENLY SUPER ரூபா 11950-00
C 90 ரூபா 10600-00
மிகக்குறைந்த எண்ணிக்கையே உண்டு
ஏனைய மொடல்களும் உண்டு - தொடர்புகொள்க
15, சென் பீற்றேஸ் லேன்
ஆஸ்பத்திரி வீதி, ... யாழ்ப்பாணம்
போன்: 7 3 4 2
4686

புதிய வகுப்புகள்
G C. E. (O.L) Aug Dec
GRADE NINE (9)
காலை, மாலை வகுப்புகள் ஆரம்பம் 18 - 1 - 80
யாழ்ப்பாணக் கல்விநிலையம்
22, இராமையா செட்டியார் வீதி
யாழ்ப்பாணம்.
4685

MERCHANT FINANCE LIMITED
Special Transferable Deposits.
Earn 18% Interest per annum on one to three year term Deposits. You can get your Interest monthly.
You can transfer or sell your Deposits at your will and pleasure.
Savings Deposits.
Earn 8% to 15% Interest per annum on your monthly minimum balances.
You may withdraw your deposits at short notice by post or over the counter using our "Checklets" provided to you.
In addition, earn extra "Bonus Interest" of 3% per annum on your annual minimum balance.
Apply to us for detailed information.
C. Loganathan
CHAIRMAN
129, TEMPLE ROAD,
JAFFNA.
Telephone: 8183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### வகுப்புகள்

LLB-First in Laws. சட்ட முதற் பரீட்சை 1980/81. கொழும்பு, யாழ். முன்னணி விரிவுரையாளர்களால் 5-1-80 தொடக்கம் நடாத்தப் படுகின்றது. அச்சடித்த குறிப்புகளுடன் முதல் மாத வகுப்புக்கு சகல மாணவர்களும் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். Cantabia Institute 166, Hospital Road, Jaffna.
4630

## 2-வது ஆண்டு நினைவாஞ்சலி



**ஆ. க. ஆறுமுகம்தம்பி**
(புகையிரத நிலைய அத்தியட்சகர், மருதானை)

தோற்றம் 12-8-21 மறைவு 17-1-78

அனைத்தோர் எவரும்மறவாத மாண்புடையோய
ஆத்மா எம்முடனிருக்க,
அன்புச் செல்வன் மறைந்தாய்.
என் செய்வேன், ஈசா.

ஆண்டிரண்டு அழிந்தும் அழியா இன்ப நினைவுகளை மீட்டு வருந்தும் அன்பு மனைவி கமலா, அம்மா, சகோதரங்கள், மைத்துனர்கள், மக்கள், மருமக்கள்.

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
4592

### தேவை

எமது அச்சகத்திற்கு ஒரு அச்சுக்கோப்பாளரும், மனேஜரும் தேவை. நேரிலோ அல்லது கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
4680

பிளேற்றன் மெசீன் மைன்டர்கள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4669, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
4669

### விற்பனைக்கு

வண்ணார்பண்ணை தபால் கந்தோருக்கு முற்புறம் மானிப்பாய் வீதியில் முகப்புடன்ஏறத்தாள மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ப. சு. ஐயர், உலாந்தா, 101, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4674

வீடியோ T V 20'' தொலைக் காட்சிப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், ராம்சன் ஹாட்வெயர், 19, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
4673

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 10000க்கு மேலான வெற்றுச் சாக்குகள், நல்லநிலையிலுள்ள 40 வெற்று பரல்கள் (45 கலன்) கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். 25-1-80ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

**பொதுமுகாமையாளர்.**
தென்மராட்சி
கி. ப. நோ. கூ, சங்கம்,
கொடிகாமம்,
14-1-80. 46°1

ASTROLOGY

Your fortune in 1980 by Pundit Navaratnam Rs 6/50. Ragunathan Pathipakam, New Market, Jaffna. 4676

WANTED

Wanted Accounts Clerk with at least five years experience with a good handwriting and able to maintain books in English. Age below 35years. Salary Rs. 500/- all inclusive. Apply in own handwriting to Autos Ltd., Jaffna. 4683

Wanted Manager qualified to handle the distribution of Agro-Chemicals and with a sound knowledge on the use of Agro-Chemicals Age around 40 years. Salary Rs. 800/- all inclusive, annual increments and other benefits. Apply in own handwriting to Autos Ltd. Jaffna. 4682

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம், கிளிநொச்சி.

கிளிநொச்சிச்சந்தையில் ஒரு மாட்டிறைச்சிக் கடை 19-01-1980 தொடக்கம் 31-12-1980 வரைக்கும் இவ்வெல்லைக்குள் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கான கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் முறையே ரூபா 300/- கேள்விப் பிணைப்பணமாகவும், ரூபா 25/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் மூலம் 18-01-1980 பி. ப. 12-30 மணிவரை வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பிணைப்பணம் ரூபா 25/- மீளளிக்கப்படமாட்டாது.

கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு ''விசேட ஆணையாளர், பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி'' என விலாசமிடப்பட்டு 19-01-1980 காலை 10-00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலுறையின் இடதுபக்கத்தில் கேள்வியின் பெயர் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட காலத்திற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் கேள்வி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சென்ற வருடத்திலும் குறைந்த கேள்விகள் கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

கிளிநொச்சிச் சந்தை,
மாட்டிறைச்சிக் கடை இல; 2

சன்ற வருடக் கேள்வித் தொகை: ரூபா 30,750/-

(ஒப்பம்)
**செ. கணேஸ்,**
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
1980-01-12. 4671

## இன்று

(யாழ்ப்பாணம்)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய முதலாவது 7வீரர் ஆட்டத்தில் கட்டுவன்-பாலர் ஞானோதைய வி. கழகத்தை எதிர்த்துபலாலி அண்ணா ,பீ,வி. கழகம் ஆடும், தொடர்ந்து இடம்பெறும் 11 வீரர் ஆட்டத்தில் காங்கேசன்துறைபிறன்ஸ்விகழகத்தை எதிர்த்து திருநெல்வேலி?ஒலிம்பிக் வி. கழகம் ஆடும். நிலைய மைதானத்தில் மாலை 3-30 மணி முதல் இப் போட்டிகள் இடம் பெறும்.
[கொ-இ[

## மன்னாரில் ஹிஜ்ரி விழா

(மன்னார்)

மன்னாரில் ஹிஜ்ரி விழா அடுத்த மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழாவில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

### சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வரையறுள்ளது) சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவுப் பொருட்களான மா, சீனி நவதானியங்கள், மரவெற்றுப் பெட்டிகள் ஆகியன கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250-ம் ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் செலுத்திக் கேள்விப பத்திரங்களைக் காரியாலய வேலைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 22-1-80 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொது முகாமையாளர்,**
12-1-80 4670

## மிளகாய்க்கு நியாய விலை: ஆணைக்குழு 20ல் யாழ் நகரில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

மிளகாய்க்கு நியாயமான விலையொன்றை நிர்ணயிக்கும் பொருட்டு மிளகாய் உற்பத்தியாளர்களிடமிருந்தும், நுகர்வோர் நிறுவனங்களிடமிருந்தும் கருத்துக்களைக் கேட்டறியும்பொருட்டுத் தேசிய விலை ஆணைக்குழு இம்மாதம் 20ந் தேதி யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி பண்டபத்தில் விசாரணைஒன்றை நடாத்தவுள்ளது

விவசாயிகளும், பொதுமக்களும் மற்றும் சமத்தொழில் ஆர்வமுள்ளவர்களும் இவ்வாணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கலாம். அவ்வாறு சாட்சியமளிக்கவிருப்பாதவர்கள் இது சம்பந்தமாக தமது மனுக்களை உதவி ஆணையாளர், விற்டனை அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்படுகின்றனர்.

இவ்விசாரணையின் போது வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும், யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கூனும் கலந்து கொள்வார்களெனத் தெரிய வருகிறது. (செ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 2130

1. சுப்பிரமணியம் அ லவாணரும்
2. பெண் ஆச்சிமுத்துவும், வட்டுக்கோட்டை மேற்கு

எதிரா வழக்காளிகள்

1. இளையதம்பி கிருஷ்ணராஜா மூளாய்

எதிரிகள்

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் MB 2130-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் சட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு மாசி மாதம் 6-ம் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 21,350/- பின் 20-1-78 தொடக்கம் 22-12-78 வரைக்கும் ரூபா 15,000/-க்கு 12% வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 810 சதம் 66. இதில் ரூபா 3,500/- வழக்காளிகளிடம் கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை சிற்பசங்காடு பரப்பு நில. இலாச்சம் எட்டும் (ப. நி. இ. 8) வீடும் கிணறும் பயிர் வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு வேலாயுதம் கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம் வடக்கு, அப்பாச்சி பெண் வள்ளிநாயகத்தின் ஆதனம், மேற்கு முத்துக்குமாரு கணபதிப்பிள்ளையின் ஆதனம், தெற்கு ரோட்டு இதடங்கலிற் சொரியலாய் 23/24 பங்கும் [அதற்குரியவைகளும்.

''விதானைவளவு''
சித்தன்கேணி.
30-11-79.

**சி. செ. மாரிமுத்து**
நீ மன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்
4664

உ
கணபதி துணை

சத்தியா அன் கோ,
229A, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

### சத்தியா அன் கோ அடைவு நிலயம் இடமாற்றம்

மேற்படி விலாசத்திலுள்ள எமது ஸ்தாபனம் 18-1-80 வெள்ளிக் கிழமை தொடக்கம் 151, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மாற்றப்படவுள்ளது என்பதைப் பணிவுடன் அறியத் தருகிறோம்.

இங்ஙனம்
**திருமதி வ. வேலும் மயிலும்**
உரிமையாளர்.
4677

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா

நுணாவிலைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா இறந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற கதிரவேலு உடையாரின் மகளும், காலஞ்சென்ற பூலோகசிங்கத்தின் மனைவியும், குமாரசுவாமி (இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர்) வெற்றிவேலு (அதிபர், இந்துக்கல்லூரி, சாவகச்சேரி) செல்வநாயகி, சுந்தரலிங்கம் (P. W. D. கொடிகாமம்), வேதநாயகி, இராசநாயகி (ஆசிரியை, மகாவித்தியாலயம், கட்டுகஸ்தோட்டை) ஆகியோரின் தாயும், பரமசுந்தரி, நாகேஸ்வரி, சிறினிவாசன், நீலாம்பிகை, கனகசபாபதி, அபேசிங்கி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இல்லம் ''சிவனகம்'' சாவகச்சேரியிலிருந்து இன்று 17-1-80 பி. ப. 4-00 மணிக்குப் பூதவுடல் சாவகச்சேரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.
4684

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்: **சி. இராசநாயகம்** (படவரைஞர்)
நீர்ப்பாசன இலாக்கா யாழ்ப்பாணம்
(முன்னாள் மூளாய் விதானையார் சினிவாசகம் மகன்)

மணமகள்: **க. சர்வாம்பிகை**
தெல்லிப்பழை ஆ. கனகசபை மகள்.
(இளைப்பாறிய ஓவசியர், குருநாகல் & நல்லூர் / பூநகரி)

சித்தார்த்தி வருஷம் தைமாதம் 5-ந் திகதி (19-1-80) சனிக்கிழமை பகல் 12-00 முதல் 1-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் எமது திருமண விழா நடைபெறவிருப்பதால் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடனழைக்கிறோம்.
(தனிப்பட்ட அழைப்புகளில்லை)

உபசாரம்: மணமகள் இல்லம் 19-1-1980
சனிக்கிழமை பி. ப. 4 மணி
தலமண் கலட்டி, தெல்லிப்பழை.

மணமகன் இல்லம்: 20-1-1980
ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணி
டச்வீதி, மூளாய்.
4667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**
உங்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதைப் பிறருக்குக் கொடுக்க முன்வாருங்கள்.
ஆச்சார்ய விநோபாவே.

## மக்கள் கருத்து

### சீமெந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் சீமெந்தைப் பெறுவதற்காக மக்கள் நீண்ட கியூ வரிசையில் நிற்பதை நாள்தோறும் காணக்கூடியதாக உள்ளது. நாட்டில் சீமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனுல் பொது மக்கள் ஆரம்பித்த கட்டிடவேலைகளைப் பூர்த்திசெய்யமுடியாது பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். சீமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டும் அது போதியளவில் மக்களுக்குக் கிடைக்காததும் பெரும் குறைபாடாகும். சீமெந்துக் கூட்டுத்தாபனம் இது குறித்துக் கவனஞ்செலுத்தி, உற்பத்தியை அதிகரிக்க முன்வந்து, மக்களுக்குச் சீமெந்து தாராளமாகக் கிடைக்கக்கூடிய வகையில் சீமெந்தை விற்பனைக்கு விடமுன்வரவேண்டும்.

யாழ். கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு முன் நீண்ட நேரம் மக்கள் கியூ வரிசையில் காத்துநின்றும் சீமெந்தைப் பெறமுடியாது திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. காலையில் எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் திறக்கப்படுவதற்கு முன்பே கியூ வரிசையில் பல மணி நேரமாகக் காத்துநின்றும் இறுதியில் சீமெந்தைப் பெறமுடியாது ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

இவ்வாறு நீண்ட நேரம் கியூவில் நின்று சீமெந்தைப் பெறச் செல்லும் மக்களுக்கு யாழ். கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன அதிகாரிகள் ஏதோ சாட்டுக்களைக் கூறி, அவர்களைத் திருப்பியனுப்பி விடுவது கவலைக்குரிய விடயமாகும். அவர்கள் கூறுகின்ற நொண்டிச் சமாதானங்களை மக்களும் வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டு செல்கிருர்கள்.

நாட்டில் போதியளவு சீமெந்து கையிருப்பில் உள்ளதாகவும், அதற்கு எதுவிதத் தட்டுப்பாடும் இல்லையென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அதே நேரத்தில் நாளுக்கு நாள் சீமெந்தின் உற்பத்தி அதிகரிப்பதாக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. ஆனுல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குச் சென்ருல் அங்கே சீமெந்து இல்லையென்று கூறிக் கையை விரித்துவிடுகிருர்கள்.

கள்ளச்சந்தையில் தேவையான அளவு சீமெந்தைப் பெறக்கூடியதாக உள்ளது. எப்படி?

தி. வெற்றிவேலுப்பிள்ளை
வட்டுக்கோட்டை.

### மட்டக்களப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புமாநகரசபைக்குச் சொந்தமான 156வீடுகள் இன்று குடியிருப்பாளருக்குச் சொந்தமாக்கப்படவுள்ளன.
மட்டக்களப்புநகரஎல்லையில் 101 வீடுகளும்,முகத்துவாரத்ல் 33 வீடுகளும், நாவற்குடாவில் 22 வீடுகளும்குடியிருப்பாளருக்குச்சொந்தமாகவழங்கப்படும். (வெ)

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு
## இலக்கியம் வாயிலாக முடியும்
### "சேதுபந்தனம்' அறிமுக விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி

(யாழ்ப்பாணம்)
தேசிய ஒருமைப்பாட்டுக்கு இலக்கியம் ஒருவாயிலாக அமையமுடியும் என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறிஞர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முத்தமிழ் வெளியீட்டுக்கழகமும் மக்கள் கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய சேதுபந்தனம், தெமலகேட்டிகத்தா ஆகிய நூல் அறிமுகவிழாவில் பேராசிரியர் சிவத்தம்பி ஆய்வுரை நிகழ்த்திஞர். கலாநிதி சண்முகதாஸ் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ் இலக்கியம், சிங்கள இலக்கியத்தின் தன்மைகளை உள்வாங்காமல் ஆக்கப்பெறுகின்றன. இதன்காரணமாக இது தேசிய இலக்கியமாக முடிவதில்லை. இன்றைய காலகட்டத்தில் மும்மொழிப் பயிற்சி அவசியமாகியுள்ளதிஞல் இருமொழி இலக்கியங்களின் பரிவர்த்தனையும் அவசியமாகியுள்ளது என்ருர் பேராசிரியர் சிவத்தம்பி.

ஐம்பதுகளில் இந்தநிலை மாறி 70 களில் தமிழ் இலக்கியத்தில் சிறப்பாக என்ன இடம்பெறுகின்றது என்பதை அறிவதில் சிங்கள ஆக்க இலக்கியவாதிகள் முயற்சி எடுக்கலாஞர்கள். இந்த வகையில் இருமொழி இலக்கிய பரிவர்த்தனையின் நோக்காக இருந்து சஹலங்கா என்ற தமிழ்க் கவிதை மொழிபெயர்ப்பு சிங்களத்தில் வெளிவந்துள்ளது என்ருர்.

இந்த நாட்டில் பரந்து வாழும் சிங்கள மக்களின் இளைய தலைமுறையினருக்கு இம்மாதிரி மொழிபெயர்ப்பு நூல்கள் தொடர்பையும் நட்பையும் ஏற்படுத்தும் என்று கூறலாம். சிங்கள இலக்கியத்தில் தமிழ்மனிதனின் தோற்றம் எவ்வாறு காட்டப்படுகின்றது, தமிழ் இலக்கியத்தில் சிங்கள மனிதனின் தோற்றம் எவ்வாறு காட்டப்படுகின்றது என்பதை அறிய முயன்ருல் இந்த இரு இனங்களுக்கிடையிலுமான பிரச்சினைகளுக்காக வூற்றுக்கண்ணை அறியக்கூடியதாய் இருக்கும் என்று பேராசிரியர் சிவத்தம்பி கூறிஞர்.

இலக்கியங்களை மொழிபெயர்க்கும்போது எழும் பிரச்னைகள்பற்றி விளக்கிப்பேசிய பேராசிரியர் சிவத்தம்பி ஆக்க இலக்கிய வாதிகளே இவ்வாருன இலக்கிய மொழிபெயர்ப்புக்களையும் செய்தல் வேண்டும் என்ருர்.

திரு. கனகரத்தினத்தின் முயற்சியை அவர் பெரிதும் பாராட்டிஞர்.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகையில், இந்த நாட்டில் வாழுகின்ற இரு இனங்களுக்கிடையிலுமான ஒத்த

(7-ம் பக்கம் பார்க்க)

## "'ஐயா'என்றழைக்கும்போது மனம் வேதனையடைகிறது"
### நரிப்புலித்தோட்ட கிராமத்தில் அமைச்சர் இராசதுரை

(மட்டுநகர்)
என்னை இந்நிலைக்கு உயர்த்திய நீங்கள் ஐயா என்று சொல்லும்போது என்மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

மேற்கண்டவாறு மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை மட்டக்களப்பு நரிப்புலித் தோட்டக் கிரம முன்னேற்ற சங்கத்தின் மட்பாண்ட நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்,

மண்முனை மேற்கு உதவி அரகாங்க அதிபர் திரு. சி. சொர்னவடிவேல் தலைமையில் நடைபெற்ற வைபவத்திற்கு வருகை தந்த அமைச்சர் அக்கிராம மக்கள் கோலாட்டப், கும்மியாட்டத்துடன் வரவேற்கப்பட்டார். 65 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்நிலையத்தை திறந்து வைத்த அமைச்சர் மேலும் பேசுகையில் முன்பெல்லாம் என்னை வயோதிபர்கள் மகன் என்றும், சகோதரர்கள் அண்ணன், தம்பி என்றெல்லாம் உறவு சொல்லி அழைப்பீர்கள். இன்றுநான் மந்திரியானவுடன் என்னை ஐயா என அழைக்கின்றீர்கள் இதனுல்என் மனம் மிகவும் வேதனைப்படுகின்றது.

நீங்கள் என்னை பழையபடி அழையுங்கள். உங்களால்தான் நான் இன்று இந்நிலையில் இருக்கின்றேன். கடந்த காலங்களில் என்னை பாராளுமன்ற உறுப்பினராக்கி, இப்போ என்னை மந்திரியாக்கி விட்டீர்கள். இதற்கு காரணம் நான் அல்ல. உங்கள் அன்பும், ஆதரவும் ஆசியும்தான்.

இக்கிராம மக்களை நான் என்றும் மறவேன். அன்று தொடக்கம் இன்றுவரை என் மேல் அன்பு கொண்டவர்கள்.

உங்கள் பிரச்னைகளை நான் நிச்சயம் தீத்துவைப்பேன். இக்கிராமத்தவர்கள் கைத்தொழில் பழக வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் 65 ஆயிரம் ரூபாசெலில் இந்தமட்பாண்ட நிலையத்தை நிறுவித் தந்துள்ளேன். மேலும் இக்கிராமத்தில் வீடமைப்பு திட்டம் உருவாக்கப்படும். உங்கள் பிரச்னைகள் எதுவாயினும் என்னிடம் தெரிவியுங்கள். என்ஞல் இயன்றளவு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வேன்.

இவ்வைபவத்தில் கிராமத்தின் தேவைகள் குறித்து கிராம முன்னேற்ற சங்க காரியதரிசிதிரு. கே.ஏகாம்பரம் மகஜர் ஒன்றை அமைச்சரிடம் ஒப்படைத்தார்.

மற்றும் இவ்வைபவத்தில் க. சின்னத்தம்பி (அதிபர்) திரு. எஸ். சுப்பையாபிள்ளை (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரும் உரையாற்றிஞர்கள்.

......

## ஓய்வுபெறும் கூட்டுறவுப் பரிசோதகர்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், வவனியா, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் கூட்டுறவுப் பரிசோதகராகப் பணியாற்றிய திரு. பொன்னம்பலம் நெல்லிநாதன், இவ்வருடம் முதல் ஓய்வுபெறுகிருர்.

கூட்டுறவு உத்தியோகத்தர் சங்கத்தின் வவனியா-யாழ்-திருகோணமலைக் கிளைகளின் தலைவராகவும் பணியாற்றிய இவர், வவனியா தெற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காரியதரிசியாகவும், தம்பலகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

யாழ், வண்ணுர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயப் பழைய மாணவரான இவர் யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் காரியதரிசியாகப் பணியாற்றிவருகிருர். (கி-இ)

## யாழ். ரயில் நிலையத்தின் நான்கு அதிபர்களின் இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)
யாழ். புகையிரத நிலையத்திலிருந்து கடந்த அக்டோபர் மாதம் திடீரென இடமாற்றம் செய்யப்பட்ட நான்கு உதவி புகையிரத அதிபர்களினதும் இடமாற்றங்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

காரணம் எதுவுமின்றி தாம் திடீரென இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதாக இவர்கள் நால்வரும் மேலிடத்திற்குப் புகார்செய்திருந்ததை அடுத்தே இவர்களது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டது.

திருவாளர்கள் எஸ். மார்க்கண்டு, டி. சிதம்பரநாதன், பி. ரவீந்திரன், ரி. சுப்பிரமணியம் ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டு இப்போது மீண்டும் யாழ். ரயில்நிலையத்திற்கு வந்துள்ளனர்.

திடீர் இடமாற்ற உத்தரவினல் பாதிக்கப்பட்ட இவர்களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படவேண்டும் என்று புகையிரத நிலைய அதிகாரிகள் சங்கமும் ஜனாதிபதியிடம் ஏற்கனவே கேட்டிருந்தது. (இ)

## பேசாலை-கரிசல் மோதல்

(மன்ஞர்)
பேசாலை-கரிசல் ஆகிய இரு கிராமங்களிலும் இரு பகுதியினருக்கிடையில் மூன்ருவது தடவையாக மோதல் ஏற்பட்டது. கரிசலைச் சேர்ந்த ஒருவருக்கும் பேசாலையைச் சேர்ந்த ஒருவருக்கும் பேசாலையில் கடலை வாங்கும் போது ஏற்பட்ட சச்சரவால் இம்மோதல் ஏற்பட்டுள்ளது என அறியப்படுகிறது.

இதனுல் பேசாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கரிசலைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான தேனீர்க்கடையொன்று பேசாலையில் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மன்ஞர் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## நூலகவியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
இலங்கை நூலகவியற் கருத்தரங்கு இம்மாதம் 19-ந் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்குத் ஆரம்பமாகிமுழுநாள் நிகழ்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொது அரங்கு நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகர் திரு. ஆர். எஸ். தம்பையா தலைமை தாங்குகின்ருர், பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகும் சிறப்பரங்கிற்கு தேசிய நூலகச்சபையின் உதவி இயக்குநா திரு: எஸ். எம். கமால்தீன் தலைமை வகிக்கின்ருர்.

காலை நிகழ்ச்சியில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரெட், தேசிய நூலகச்சபை உதவி இயக்குநர் திரு. எஸ். எம். கமால்தீன், இலங்கை நூலகச் சங்கத்தலைவர் திரு.பீலிக்ஸ் சமரரட்ன ஆகியோர் சிறப்புரைகளாற்றுவார்கள்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளாக, "வாசகர் நோக்கில் உசாத்துணையும் நூலகங்களும்" என்னும் தலைப்பில் யாழ், பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா பேசுவார்.

"யாழ்ப்பாணத்தில் நூலகவியக்கம் - இன்றும்" அன்றும் என்றபொருளில் யாழ். பல்கலைக்கழக நூலகத்தைச்சேர்ந்த திரு. ஆ. சிவநேசச்செல்வன் பேசுவார்.

"பாடசாலை நூலகங்களின் பிரச்னைகள் சிலகுறிப்புகள்" என்னும் விடயம் பற்றி இலங்கை நூலகச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. சா. மாணிக்கவாசகர் பேசுவார்.

"உசாத்துணை நூலகங்கள் இன்றும் நாளையும்" என்ற விடயம்பற்றி யாழ். பல்கலைக் கழக நூலகர் திரு. ஆர், எஸ். தம்பையா கட்டுரை சமர்ப்பார்.

"பொதுசன நூலகங்கள் பிரச்சனைகளும் அவற்றிற்கான வழிவகைகளும்" என்னும் தலைப்பில் பல்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. வே. இ. பாக்கியநாதன் பேசுவார்.

'பல்கலைக்கழக நூலகங்கள் வளர்ச்சிப் போக்கும் தேவைகளும்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழகத்தின் உதவி நூலகர் திரு. சிவனையா ஜீவன் பேசுவார்.

"யாழ்ப்பாணத்தில் அறிவியல் ஆவண ஆக்க நிலையம்-அதன் அவசியமும் சாத்தியக் கூறுகளும்" என்ற தலையங்கத்தில் யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் திருமதி ஆர். பரராஜசிங்கம் பேசுவார்.

......

## முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் அளித்த பாராட்டு

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ், மாநகரசபை உறுப்பினர்கள் திரு. சி.தியாகராஜாவுக்கும், திரு. ஆ. துரைராசசிங்கத்துக்கும் பாராட்டும் தேனீர்விருந்தும் அளித்துக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் எழுத்தாவர்கள், தொழில் அதிபர்கள், விரிவுரையாளர்கள் போன்ற பிரமுகர்களுடன் 'சேதுபந்தனம் நூலின் ஆசிரியர் திரு. த. கனகரத்தினம், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும் தமிழ் அறிந்த சிங்கள எழுத்தாளருமான திரு. டி. டி. நாணயக்கார ஆகியவர்களும் வந்திருந்தனர். யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திரு. இராசாவிசுவநாதன், யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர்திரு.வெ.யோகேஸ்வரன் ஆகியவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்,

(7-ம் பக்கம் பாரக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அலவி' தாக்கப்பட்டதற்கு இளைஞர்பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சிகளின் தொழிற் சங்கக் கூட்டுக்கமிட்டி மேற்கொண்ட ... ஆர்ப்பாட்டத்தின்போது சுதந்திரக்கட்சித் தொழிற்சங்கத்தலைவர் ஜனுப் அலவிமௌலானுவும், மற்றும் தொழிற்சங்கவாதிகளும், தொண்டர்களும், பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களும் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசே முழுப்பொறுப்பாகும்!''

இவ்வாறு தமிழ்இளைஞர் பேரவையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''முன்அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அதன்பின்னரே அமைதியானமுறையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜனநாயகம், தார்மீகம்என்றுபேசும் ஆட்சி, ஆர்ப்பாட்டம் செய்வோரையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு உள்ளதாகும். இதைவிடுத்து தொழிலாளர் தாக்கப்படும்போது 'பூனைக்கும்தோழன்பாலுக்கும்காவல்' என்பதுபோன்று, அரசுபார்த்துக்கொண்டிருப்பதும்- பொலிசார் கண்மூடித்தனமான நடவடிக்கையில் ஈடுபடுவதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இவ்வாறான நிலைமைகள் இலங்கை முதலாளித்துவ- பாஸிஸப் பாதையில் சென்றுகொண்டிருப்பதையேஎடுத்துக்காட்டுகின்றது,

''இவ்வாறான நிலைமை 1956-ம் ஆண்டு காலிமுகத்திடலில் தமிழ் அரசியல் கட்சிகள் சத்தியாக்கிரகப்போராட்டம் நடத்தியபொழுதும் நிகழ்ந்தது. இன்று தாக்கப் படுபவர்களின் கட்சியே அன்று ஆட்சியில் இருந்தது. பாராளுமன்றக் கட்டடத்தில் நின்று தாக்குதலை அக்கட்சியினர் பார்த்துக் கொண்டுநின்றனர். கேலியும் செய்தனர். அன்று தமிழர்களுக்கு நடந்ததுஇன்று சிங்களவர்களுக்கும் நடக்கின்றது. தமிழர்களை நசுக்கக் கொண்டுவரப்படும் சட்டங்களே பின்னர் சிங்களத்தொழிலாளரையும் நசுக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

''இந்நிலைமையை மாற்ற தென்னிலங்கையில் இன்று எதிர்க்கட்சிகள் அனைத்தும், தொழிற்சங்கங்கள் அனைத்தும் தமிழ் நாட்டினத்தின் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையற்ற முறையில் அங்கீகரிக்க வேண்டும். இதனுற்ருன் தமிழ் மக்களையும் போராட்டத்தில் ஒன்றுசேர்க்க முடியும் இதைச் சிங்கள அரசியல் கட்சிகளோ அன்றி மக்களோ உணரும் காலம் எப்போதோ?

(செ

# கஷ்டப் பிரதேச வ.போ.ச. ஊழியருக்கு புதிய இடமாற்றத் திட்டம்

## புதிய பஸ் சேவைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் பிராந்தியதலைவர்கூறுகிருர்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச்சபை கஷ்டப்பிரதேசங்களுக்கும், குடியேற்றத் திட்டங்களுக்கும் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகரா மேற்கண்டவாறு கூறினர்.

இம்மகாநாட்டில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளா திரு. குணரத்தின பண்டா, இயக்க முகாமையாளர் திரு.கே. நாகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. டட்லி குணசேகரா மேலும் கூறியதாவது:

பஸ்ஸில் வேலை செய்பவர்களும், பிரயாணிகளும் மிகவும் அன்பாகப் பழகவேண்டும். பஸ்ஸில் இடம் இருக்கும்போது பிரயாணிகளை ஏற்றிச் செல்லாவிட்டால் பஸ்ஸில் வேலைசெய்யும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படும்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையினர் 78ம் ஆண்டு 60 லட்சம் ரூபாவை நிகரலாபமாக எதிர்பார்த்தனர். முதல் 6 மாதம் வரை 15 லட்சம் ரூபா லாபமாகக் கிடைத்தது. அதன்பின் எண்ணெய் விலை அதிகரித்ததினுல் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை.

கடந்த நான்கு மாதங்களாகத்தான் வடபிராந்தியத்தில் கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதனுல் மக்கள் கூடுதலாகப் பிரயாணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

டிப்போக்களில் முதடைந்து முடங்கிக்கிடக்கும் பஸ்களின் எண்ணிக்கையும் இப்போது குறைந்துவிட்டது. அதனுல் சபைக்கு கூடுதலான வருமானமும் கிடைக்கிறது.

உயர் அதிகாரிகளிலிருந்து சிற்றூழியர்வரை ஒற்றுமையாக ஒரே குடும்பம்போல் செயல்படுவதனுல்தான் இது முடிகிறது.

### இடமாற்றம்

வடபிராந்தியத்தில் சில டிப்போக்களில் மேலதிகமாக ஊழியர்கள் இருக்கிருர்கள். இவர்கள் அதிர்ஷ்டச்சீட்டின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டு வெளியிடங்களுக்கு மாற்றப்படுவார்கள்.

மன்னர், முல்லைத்தீவு, வவுனியா, போன்ற கஷ்டப் பிரதேசங்களில் சிலர் தொடர்ந்து வேலைசெய்துவருகின்றனர். இவர்களின் கஷ்டத்தைப் போக்குமுகமாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் மூலம். சகலரும் வடபிராந்தியத்திலுள்ள 7 டிப்போக்களுக்கும் மாற்றம் செய்யப்படுவர். இத்திட்டத்தால் ஒருவருமே தொடர்ந்து ஒரே இடத்தில் வேலைசெய்யவேண்டிய நிலைக்கு ஆளாகமாட்டார்கள்.

### கலந்துரையாடல்

ஏழு டிப்போக்களிலும் வேலைசெய்யும் அதிகாரிகளும் தொழிலாளர்களும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 2 மணி முதல் 4 மணிவரை தமது டிப்போக்களில் சந்தித்துக்கலந்துரையாடுவார்கள். இக்கலந்துரையாடலின் போது சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும்.

தொழிற்சங்கத் தலைவர்கள் மாதம் ஒரு முறை என்னைச் சந்தித்து தொழிலாளர் பிரச்சினைகளை எடுத்துக்கூறவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் வ.போ.ச. வின் இயக்குநர் சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் மட்டுமே நடைபெற்றது. இப்போது அந்த நிலைமாற்றப்பட்டு எதிர்காலத்தில் 7 டிப்போக்களில் இயக்குநர்சபைக் கூட்டங்கள் நடாத்தப்படும்.

கடந்தவாரம் இயக்குநர்சபைக் கூட்டம் ஒன்றைமுல்லைத்தீவில் நடாத்தியுள்ளோம். அதனுல் முல்லைத்தீவு டிப்போவின் பிரச்சினைகளை நேரில் கண்டும் கேட்டும் அறியக்கூடியதாக இருந்தது.

பள்ளிக்கூடப்பிள்ளைகளினதும், உத்தியோகத்தர்களினதும் போக்குவரத்துஇடநெருக்கடியைத் தீர்க்கும் நோக்குடன் பாடசாலைகளை, ஏனைய காரியாலயங்கள் ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன் ஆரம்பித்து அவற்றை மூடுவதற்கு ஒருமணித்தியாலயத்திற்கு முன் மூடும்படி பாடசாலை அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். ஆனல் காரியாலயங்கள் ஆரம்பிப்பதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன் பாடசாலைகள் ஆரம்பமாகி அவற்றை மூடுவதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன் பாடசாலைகள் மூடப்படுகின்றன. அதனுலேயே போக்குவரத்துஇடநெருக்கடியைத் தீர்க்க முடியவில்லை.

பெற்ருேர்கள் விரும்பினுல் பாடசாலைகளை ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே ஆரம்பித்து மூட முடியும். இதனுல் பிள்ளைகளினதும் ஏனையோரதும் போக்குவரத்து வசதிக்கு வழிவகுக்க முடியும்.

வடபிராந்தியத்தில் கடமையில் ஈடுபட்ட சாரதிகளில் ஒருவர்மட்டுமே தமது கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டு தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (செ)

# மட்டுநகரில் பாடப்புத்தக விநியோகம் தேசியவைபவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள் விநியோகம்செய்வது சம்பந்தமான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வேலைகளை கல்விப் பணிப்பாளர் திரு.பி.வி.ஜி. சமரஜீவ, பிரதம கல்வி அதிகாரி திரு ஏ ஜே சற்குணராஜா ஆகியோர்மேற்பார்வை செய்துவருகின்றனர்.

பாடசாலைகளுக்குத் தேவைபடுகின்ற புத்தகங்களின் தொகைகள் அதிபர்களால் வட்டாரக்கல்வி அதிகாரிகள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் வழங்கப்படுகின்ற புத்தகங்களை வட்டாரக்கல்விஅதிகாரிகள் பொறுப்பேற்று விநியோகம் செய்வார்கள். இதன்பிரகாரம் திரு. க, யோ. முத்துராஜா மட்டக்களப்பு வடக்கு கல்வி அதிகாரி கு. ம. சிவநேசராஜா மட்டக்களப்பு தெற்கு கல்வி அதிகாரி திரு. ரீ.மனேகரன் பட்டிருப்பு கல்வி அதிகாரி திரு, கே. செபரத்தினம், கல்குடா கல்வி அதிகாரி ஆகியோர் பொறுப்பேற்று பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைப்பார்கள்,

அதிபர்கள் தங்கள் பாடசாலைகட்கு புத்தகங்களைக் கொண்டுசெல்ல வாகனவசதிகளை கல்வி இலாகா ஒழுங்கு செய்துள்ளது. இத்துடன் வேண்டிய உதவிகள் வழங்க பல சமூக இயக்கங்களும் முன்வந்துள்ளன.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவேண்டிய புத்தகங்கள் இவ்வாரம் வந்துசேரவுள்ளன. இப்புத்தகங்களை நாளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை மட்டுநகர் கல்வி லாகாவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தகங்கள் 18ம் திகதிவழங்கப்படும். அன்றைய வைபவம் தேசிய வைபவமாகபாடசாலைகளில் நடைபெறவேண்டும் என்பதால் இதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், சமூக ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் இணைந்துமேற்கொண்டு வருகின்றனர்.

......

## உப அஞ்சல் அலுவலகம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு தொகுதியில் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தித்துறை அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையின் முயற்சியினுல் இராசதுரைபுரம் என்னும் இடத்தில் புதிய உப அஞ்சல் அலுவலகம் ஒன்று திறப்பதற்கான ஏற்பாடுகளை பாலட்ட தபால் தந்தி அத்தியட்சகர் அலுவலகத்தினர் மேற்கொண்டு வருகிருர்கள். இவ் அஞ்சல் அலுவலக அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டது.







வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

தைபிறந்தால் வழிபிறக்கும் ஆகையால் இம்மாதம் உங்களுக்கு எப்படி என்பதை தெரிந்துகொள்ள கொக்குவில் பிரம்மஸ்ரீ இ.வெங்கடேச ஐயர்அவர்களின் மாத வெளியீடான

**சோதிட பரிபாலினி**

பன்னிரு ராசிகளுக்கும் விலை ரூபா 2/-

ஒரேபார்வையில் நாள், நட்சத்திரம், சுபநேரம், விடுமுறை தினங்கள் ஆகியவையுடன் வெளிவந்து விற்பனையாகிறது

**இரகுநாதையரின் பஞ்சாங்கக் கலண்டர்**

விலை ரூபா 5-50

கைக்கடக்கமானது! நாள், நட்சத்திரம், சுபநேரம் ஆகிய இன்னும் பலவற்றை உள்ளடக்கியது. ஒரு நாளைக்கு ஒரு பக்கம்.

**இரகு டயறி** விலை ரூபா 8-50

**சோதிட விலாச புத்தகசாலை,**
46, பெரியகடை, யாழ்ப்பாணம். [தொலைபேசி: 8083]

**சாரதா ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை,**
2, பஸ் நிலையம், (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம்.

**மாக்மிலன் புத்தகசாலை,**
67, ஆஸ்பத்திரி வீதி, [ஸ்ரேசன் சந்தி] யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னபூரணம் கொலை வழக்கு:

# "மச்சாளின் செத்தவீட்டு செலவிற்கு சங்கிலியை விற்பதாக எதிரி கூறினர்"

## நகைக்கடைக்காரர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கரம்பகம் மிருசுவிலில் தனது மச்சாள் இறந்துவிட்டாள் என்றும் செத்தவீட்டுச் செலவிற்கு சங்கிலியை விற்கப் போகிறேன் என்றும் எதிரி என்னிடம் கூறினர்'.

கரம்பகம் அன்னபூரணம் கொலை வழக்கில் சாட்சியமளித்த சாவகச்சேரி வி. எம். கணபதிப்பிள்ளை நகைக்கடை உதவி விற்பனையாளர் த. இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்று ஐந்தாவது தினமாக யாழ், மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஐனுப் எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் 1976ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி கரம்பகத்தில் 21 வயதான அன்னபூரணம் என்ற இளம் பெண்ணைக் கொலைசெய்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில், அன்னபூரணத்தின் உடலிலிருந்த ஆபரணங்களை கொள்ளையடித்ததாகவும், சி. செல்வநாயகம் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன், சட்டத்தரணி செல்வி ரேணுகா ராஜரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கை நடத்தினர்.

விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் மக்கள் பெருந்திரளாக திரண்டிருந்தனர்.

த. இராமலிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

76ம் ஆண்டு நான் சாவகச்சேரியில் நகைக்கடையில் உதவி விற்பனையாளராக இருந்தேன். மார்ச் 22ம் திகதி இன்ஸ்பெக்டர் நாதனும் பொலிசாரும் வந்தனர், அவர்களுடன் எதிரியும் வந்தார்.

இவரிடமா நகைகளை வாங்கினீர்கள்: என்று பொலிசார் கேட்டனர். ஆம் என்றுநான் பதிலளித்தேன்,

எதிரியிடம் 76 மார்ச் 10-ம் திகதி ஒரு சங்கிலியை வாங்கினேன். அது ஒன்றரைப்பவுண் நிறையுள்ளது. அது ஒரு டைமன் சங்கிலி.

### அடையாளம் காட்டினேன்

எதிரி கரம்பகத்திலுள்ள தனது மச்சாள் இறந்துவிட்டதாகவும், செத்தவீட்டுச் செலவிற்குச் சங்கிலியை விற்பதாகவும் கூறினர். செத்தவீட்டுச் செலவிற்குப் பணம் தேவையென்றதால் அதனை வாங்கினேம். 540 ரூபாவிற்கு வாங்கினேம். அதற்கு றிசீட்டுக்கொடுத்தோம். எதிரி தனது பெயர் க. இராசசிங்கம் என்று றிசீட்டில் கையெழுத்திட்டார். கரம்பகம் மிருசுவில் என்ற விலாசம் தந்தார். இங்கு காட்டப்பட்ட றிசீட் நான் எழுதியது தான். அவர் என்னிடம் சங்கிலி விற்றபடியால் அவரை அடையாளம் காட்டினேன்.

சங்கிலியை எதிரியிடம் வாங்கி அதற்கு பொலிஷ் போட்டு சோக்கேசில் விற்பனைக்குப் போட்டிருந்தேன்.

### சங்கிலியை நானே வாங்கினேன்

சங்கிலியையும், றிசீட் புத்தகத்தையும் பொலிசார் பாரமெடுத்தனர். கடையில் 3 பேர் இருக்கின்றனர். நான் தான் சங்கிலியைவாங்கினேன்

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் குறுக்குவிசாரணை செய்தார்.

கே: சங்கிலிக்கு நம்பர் போடப்பட்டதா?

ப: அன்று போடப்படவில்லை.

கே: சங்கிலியை பொலிஷ் பண்ணி விற்பனைக்கு வைத்தீர்?

ப: ஆம்.

கே: அது புதிய சங்கிலியா பழைய சங்கிலியா?

ப: பாவித்த சங்கிலி.

கே: புதிய சங்கிலிக்கும் பழைய சங்கிலிக்கும் வித்தியாசம் தெரியுமா?

ப: ஆம்.

கே: இந்தச் சங்கிலி மிகவும் நெருக்கமாகச்செய்யப்பட்டுள்ளது?

ப: ஆம்.

கே: இதற்குள் உள்ள ஊத்தைகளை எடுக்கமுடியுமா?

ப; அசிட் போட்டுக் கழுவி எடுக்கலாம்.

கே: அசிட் போட்டுக் கழுவும் வழக்கம் உண்டா ?

ப; அப்படியில்லை.

கே: அப்படியாஞல் ஏன் அசிட் போட்டுக் கழுவவேண்டும் என்றீர்?

ப: தவறுதலாகச் சொல்லி விட்டேன்.

கே: பொலிசார் எத்தனையாந்தேதி வந்தார்கள்?

ப: 22ந் தேதி,

கே: றிசீட் புத்தகத்தை நீராகக் கொடுத்தீரா?

ப: பொலிசார் கேட்டனர்

கே: பொலிசார் எதிரியுடன் வந்தபோது யாரைக் கூட்டிவருகிருர்களென நினைத்தீர்?

ப: இவர்தான் சங்கிலி விற்றவர். களவுப் பிரச்னை நடந்திருக்கும் என நினைத்தோம்.

கே: உடனடியாகப் பொலிசாரிடம் சங்கிலியைக் கொடுத்தார்?

ப: ஆம்.

கே: றிசீட் புத்தக நம்பர் உபக்கு எப்படி ஞாபகமிருந்தது?

கே: பொலிசாரிடம் றிசீட் புத்தகத்தைக் கொடுத்தபோது நம்பரைக் குறித்துவைத்திருந்தேன்.

கே: எதிரியை முன்பு தெரியுமா?

ப: தெரியா.

கே: இது மணிச் சங்கிலி?

ப: ஆம்.

கே: முத்துமாலை போன்று மணி கோர்க்கப்பட்ட சங்கிலிக்கு என்ன பெயர்?

ப: மணிச்சங்கிலி.

கே: இடை மணிச்சங்கிலி வேறு, மணிச்சங்கிலி வேறு?

ப: ஒன்று.

கே: ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு?

ப: ஆம்.

### பொலிசார் வந்தனர்

சாவகச்சேரி நகைக்கடை உரிமையாளரான அப்துல் ரஹீம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சாவகச்சேரியில் நகை வியாபாரம் செய்கிறேன். பொலிசார் கடைக்கு வந்தார்கள். அவர்களுடன் எதிரியும் வந்தார். எதிரி என்ன சாமான் விற்ருரென்று பொலிசார் கேட்டார்கள். ஜிப்சி ஒன்றும், சின்ன மோதிரமும் விற்றதாகச் சொன்னேன். கால் பவுணும், மூன்றரை மஞ்சாடியும் இருந்தது. என்னிடம் வாங்கக் காசில்லை. வேறு மோதிரம் கேட்டார். கால் பவுணில் மோதிரமும், 17 ரூபா மிச்சக் காசும் கொடுத்தேன்.

76 மார்ச் 9ந் தேதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கும் 1 மணிக்குமிடையில் எதிரி வந்தார்.

( கம் பார்க்க)

## இந்திய மந்திரிசபை

- திருமதி இந்திரா காந்தி- பிரதமர்.
- ஆர். வெங்கட்ராமன்- நிதி, தொழில்.
- பி. சி. சேத்தி- வீடமைப்பு, மராமத்து, பெற்ருேலியம், இரசாயனம்.
- ஏ. பி. ஏ. கனிகான் சௌத்ரி- எரிசக்தி, நீர்ப்பாசனம், நிலக்கரி
- பி. சங்கரானந்த்- கல்வி, சுகாதாரம், சமூகநலம்
- பிஷ்மா நாராயணசிங்- பாராளுமன்ற அலுவல்கள், தகவல் தாடர்பு.
- பிரணுப் முகர்ஜி- வர்த்தகம், எஃகு, சுரங்கம், சிவில் சப்ளை.
- ஜே. பி. பட்நாயக்- உல்லாசப்பிரயாணம், சிவில், விமானப் போக்குவரத்து, தொழிலாளர் நலன்.
- ஸயில்சிங்- உள்நுறை.
- ராவ் பிரேந்திரசிங்- விவசாயம்.
- பி. வி. நரசிம்மராவ்- வெளி விவகாரம்.
- கமலபதி திரிப்பாதி- ரயில்வே.
- பி. சிவசங்கர்- சட்டம், நீதி.
- ஏ. பி. சர்மா- கப்பல், போக்குவரத்து.
- பி. வி. நரசிம்மராவ், வெளிவிவகாரம்.

### உதவி மந்திரிகள்

- ஆர். வி. சுவாமிநாதன்- விவசாயம்.
- ஜகன்னுத் பஹறதியா, நிஹார் லங்கார் (இருவர்) -நிதி
- பி. வெங்கட சுப்பை, யோகேந்திர மக்வானு (இருவர்)- உள்துறை, பாராளுமன்ற அலுவல்கள்.
- ஜாபர் ஷெரீவ்- ரயில்வே, கார்திக் ஒரோன், உல்லாசப்பிரயாணம், விமானப் போக்குவரத்து. (இ)

## உள்ளூராட்சி மன்ற வீடுகளை கையளிக்கும்வைபவம்இன்று

### மானிப்பாய்த் தொகுதி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தொகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வாடகை வீடுகளை அவற்றில் வாடகைக்கு குடியிருக்கும் மக்களுக்கு சொந்தமாக கையளிக்கும் வைபவம் இன்று முற்பகல் மானிப்பாய் பட்டின சபை மண்டபத்தில் வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறுகிறது. மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ் வீடுகளை உத்தியோக பூர்வமாகக் கையளிப்பார். வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சி. செபநாயகம் முன்னாள் மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி. முன்னாள் சுன்னுகப பட்டினசபைத் தலைவர். திருநாகலிங்கம், முன்னாள் மானிப்பாய்க் கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு ஆகியோர் உட்படப்பலர் இவ் விழாவில் உரையாற்றுவார்கள்.

மானிப்பாய் பட்டினசபையின்3 வீடுகளும், மானிப்பாய் கிராம சபையின் கல்லுண்டாய்க்குடியேற்றத் திட்டத்திலுள்ள 16 வீடுகளும், சுன்னுகம் பட்டினசபையின் 15 வீடுகளும் இவ்விழாவில் அதன் குடியிருப்பாளர்களுக்குச் சொந்தமாகக் கையளிக்கப் படவுள்ளது. [இ]

### வட்டுக்கோட்டை

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வாடகை வீடுகளை பதில் குடியிருப்பாளருக்கு வழங்கும் வைபவம் இன்று சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கலந்துகொள்வார்.

சங்கானைப் பட்டினசபையின் நிர்வாகத்திலுள்ள 21 வீடுகளும், அராலி கிராம சபையின் நிர்வாகத்திலுள்ள 6 வீடுகளும் இவ்விழாவில் அதன் குடியிருப்பாளர்களுக்கு சொந்தமாக்கப்படும், வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. [இ]

### விலை உயர்வு

(மன்னார்)

மன்னாரிலும், பேசாலையிலும் சாப்பாட்டின் விலை அதிகரித்துள்ளது. தற்போது முழுச்சாப்பாடு 4 ரூபா 50 சதமாகவும் அரைச் சாப்பாடு 4 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்

25, போஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.

தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!

உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் படை வெளியேற்றம்:

# ஐ.நா. தீர்மானம் ஆப்கான் பந்தோபஸ்துக்கு ஆபத்து

## 'டாஸ்' கருத்து

மாஸ்கோ, ஜன. 16
ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டு துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்ற ஐ. நா. தீர்மானம். ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்கும்.

இவ்வாறு சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் வெளிநயட்டினர் தலையீடு ஆபத்து நீங்கி ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியினர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் ரஷ்யப் படைகள் வெளியேறிவிடும் என்றும் அச்செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

3-ம் உலக நாடுகளும் அமெரிக்கா சீனு போன்ற பெரிய நாடுகளும் ஐ. நா. மீது இப்படியான ஒரு தீர்மானத்தைத் திணித்துள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது. (இ)

இந்திரா ஆட்சியில்

# ஆசியாவில் அமைதியும் உறுதிப்பாடும் ஏற்படும்

## சீனப்பிரதமர் பாராட்டு

புதுடில்லி, ஜன. 16
வளர்ந்து வரும் சீன-இந்திய நட்புறவு திருமதி காந்தியின் ஆட்சியில் மேலும் வளர்ச்சி அடைய வேண்டும்.

இவ்வாறு சீனப் பிரதமர் திரு. குவாகுவா பெங் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திருமதி காந்தியின் ஆட்சியில் ஆசியாவில் அமைதியும் உறுதிப்பாடும் கொண்ட நிலை ஏற்படும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். [இ]

......

# பாக்., ஈரானுக்குள்ளும் ரஷ்யா ஊடுருவலாம்

## எதையும் முறியடிக்க அமெரிக்காவிடம் திட்டம் உள்ளது என்கிறார் பிரௌன்

வாஷிங்டன், ஜன. 16
தமது நாட்டுக்கு ஏதாவது பலன் கிடைக்கும் என்று கருதும் பட்சத்தில் சோவியத் யூனியன் ஈரானுக்குள்ளும் பாகிஸ்தானுக்குள்ளும் தனது படைகளை அனுப்பும்.

இவ்வாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ஹரோல்ட் பிரௌன் தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனின் தற்போதைய நடவடிக்கைகள் மோசமான நெருக்கடி நிலையைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

சோவியத் யூனியனின் சகல நடவடிக்கைகளையும் அமெரிக்க புலனாய்வுத்துறை மிக உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது. ஆப்கானிஸ்தானுக்குள் ரஷ்யப் படைகள் ஊடுருவல் நடத்துவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த போது அமெரிக்க புலனாய்வுத்துறை அவதானித்துக் கொண்டிருந்தது என்றும் திரு. பிரௌன் கூறினார்.

சோவியத் யூனியனின் எந்த வித ஆக்கிரமிப்பையும் முறியடிக்கும் வகையில் அமெரிக்கா பல அவசரத்திட்டங்களைத் திட்டிவைத்துள்ளது என்றும் அவர் கூறினார். (இ)

### பாக். அதிபருக்கு இந்திரா விசேட செய்தி

புதுடில்லி, ஜன. 16
பாகிஸ்தானில் இருக்கும் இந்தியத் தூதுவர், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பாக் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்குக்கு விடுத்துள்ள விசேட செய்தியுடன் மீண்டும் இஸ்லாமாபாத் திரும்பியுள்ளார்.

தமது புதிய வெளிநாட்டுக் கொள்கைக்கமைய பாகிஸ்தானுடன் எவ்விதமான நட்புறவை மேற்கொள்வது என்பது குறித்து திருமதி காந்தி தமது தூதுவருடன் பேச்சு நடாத்திய பின்னர் ஜெனரல் ஹக்குக்கான தமது செய்தியை தூதுவரிடம் கையளித்தார். (இ)

# இந்திய-பாக். உறவு

## மேலும் விருத்தி அடையும்

### இந்திராவுக்கு ஹக் பாராட்டு

இஸ்லாமாபாத், ஜன. 16
திருமதி இந்திரா காந்தியின் ஆட்சியில் இந்திய - பாகிஸ்தான் உறவு மேலும் விருத்தி அடையும் என்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தனது அயல் நாடுகளுடன் சமாதானமாகவும் நட்புறவுடனும் வாழவே விரும்புகிறது என்றும் ஜெனரல் ஹக் தமது செய்தியில் கூறியுள்ளார். [இ]

### ஆற்றில் பாய்ந்தது வான் 12 பேர் பலி


திருச்சி, ஜன. 16
திருச்சியிலிருந்து சபரிமலை சென்று திரும்பிய வான் ஒன்று வழியில் ஆற்றில் பாய்ந்ததை அடுத்து 12 யாத்திரிகர்கள் நீரில் மூழ்கிவிட்டனர் என அறிவிக்கப்பட்டது.

9 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். (இ)

......

### மன்னார் இ.போ.ச. இயக்குநர் சபைத் தேர்தல்

(மன்னார்)
மன்னார் இ. போ. ச. ஊழியர்களின் இயக்குநர்சபைத் தேர்தல் இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளது. 7 பேர் கொண்ட இடத்திற்கு 14 பேர் போட்டியிடுகின்றனர். இதில் 7 பேர் ஐ. தே. க. சார்பிலும் 7பேர்சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி சார்பிலும் போட்டியிடுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி.ஆர்.-வாணிஸ்ரீ
ஊருக்கு உழைப்பவன்

வெஸ்லி
(பானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெமினி
உனக்காக நான்

ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நம்பியார் - ரங்கராவ் நடித்த
உள்ளத்தை உருக்கும் காதல்திரையோவியம்
தே வ தா ஸ்

2-வது ஜனசமுத்திர வாரம்
REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. Potrays a man with a mission... gathering a team of SKYRIDING daredevils to rescue a kidnapped wealthy American family!!
They soared from the skies to stage the most daring rescue ever filmed!
SKY RIDERS
See...the most exciting, dangerous and fastest Air drama...FULL OF ACTION Co-starring: SUSANNAH YORK...ROBERT CULP and CHARLES AZNAVOUR
Color byDELUXE
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா, ஜெய்கணேஷ், அசோகன்
தாயில்லா குழந்தை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனேரமா, தேங்காய் சினிவாசன் நடிக்கும்
4-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)

கடைசி வாரம்
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த
அந்தமான் காதலி
(வர்ணப்படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
எங்கள் தங்க ராஜா (பத்தம்புதிய பிரதி-கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
பு கு ந் த வீ டு

100-வது வெற்றித் திருநாளை நோக்கி...
காட்சியளிக்கும் இவ்வேளையில் மொத்த வசூலாக ரூ. 375,000-00யும் தாண்டி அதிவேகமாக விரைகிறது!
சாந்தி (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7642
ஜெய்-ஸ்ரீதேவி, எம். ஆர். ராதா
டாக்ஸி டிரைவர்
வண்ணத் திரையோவியம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி, சுஜாதா, நாகேஷ், விஜயகுமார்
தீ ப ம்
வெள்ளிவிழாச்சித்திரம்

# இடமாற்றம்பற்றி அமைச்சரிடம் முறையீடு

(மட்டுநகர் நிருபர்)

காரணமின்றி தொழிலாளர் இடமாற்றம் ஆட்சேபித்துநீதி மந்திரி திரு. கே. டபிள்யு தேவநாயகத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மையில் மட்டக்களப்பு கரடியனாறு விவசாயப்பண்ணையில் இருந்து நிரந்தரமற்ற தொழிலாளர்கள் 12 பேர் காரணமின்றி சிங்களப்பகுதியிலுள்ள விவசாயப்பண்ணைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இவ் இடமாற்றத்தினால் தாம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவ் இடமாற்றம் காரணமின்றி வழங்கப்பட்டமையால் இதனை ரத்து செய்யுமாறு இப் 12 தொழிலாளர்ளும் நீதி மந்திரி திரு. கே. டபிள்யு. தேவநாயகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்கள். இவ்விடமாற்றத்தை விவசாய ஆராச்சி அமைச்சர் திரு. ஈ.எல். சேனநாயக்காவுடன் தொடர்பு கொண்டு ரத்து செயவதற்கு தேவநாயகம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்!

இடமாற்றம் செய்யப்பட்ட தொழிலாளர்களில் சிலர் இன்னும் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்திற்கு செல்லவில்லை. ஏனையோர் சென்றுள்ளனர்.

......

# பாடசாலை திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் யாதவ பாலர் பாடசாலை திறப்பு விழா இன்று நடைபெறும். இப்பாடசாலையை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் திறந்து வைப்பார். (கொ)

......

## முத்தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் வைபவம் நடந்தது.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் வாழ்த்துப்பாக்கள் பொறிக்கப்பட்ட இரு அழகிய மடல்கள் (மரத்தினாலானவை) வாசித்து வழங்கப்பட்டன. தலைவர் உட்பட தொழில் அதிபர் அரசரட்ணம், யாழ். மேயர், யாழ். எம்.பி., திரு. சொக்கன் ஆகியவர்கள் இரு மாநகர உறுப்பினர்களையும் பாராட்டிப் பேசினார்கள்.

எழுத்தாளர் திரு. டானியல் பேசும்போது யாழ். போதுநூலகத்தின் கேட்போர் கூடத்தினை கலை இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு கொடுத்துதவ வேண்டும் என்றும் மாநகரசபை தனது எல்லைக்குள்வரும் சகல நூலக வாசிகசாலைகளிலும் வைக்கக்கூடியதாக எழுத்தாளர்களின் நூல்களைத் தன் செலவில் கணிசமான அளவில் விலைக்கு வாங்கிக் கொள்ள முன்வரவேண்டும் என்றும் தேசிய ரீதியில எழுத்தாளர்கள் எவராய் இருந்தாலும் அரசாங்கமே குறிப்பிட்ட எண்ணிக்கையில் அவர்களின் நூல்களை விலைக்குவாங்கிக் கொள்ளும் விதத்தில் யாழ்ப்பாணம் எம். பி. பாராளுமன்றத்தில் வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இரு மாநகரசபை உறுப்பினர்களும் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

-பேரு

ஹரன் யாழ்ப்பாணம்
எம் ஜி.ஆர்.-லதா
உலகம் சுற்றும் வாலிபன்
(புதிய பிரதி)

# அவசரகாலச்சட்ட நீக்கம் பாதுகாப்பு இயக்கம்மகிழ்ச்சி

(கொழும்பு)

வடமாகாணத்திலும், கட்டுநாயக்கா விமானத் தளத்திலும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமையை இலங்கை ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக இவ்வியக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

1980ம் ஆண்டில் இலங்கையின் எந்த ஒரு பகுதியிலும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் அமுலிலில்லாதிருப்பதையே இவ்வியக்கம் விரும்புகின்றது. அவசரகாலச்சட்டம் அமுலிலிருந்த கடந்த ஐந்தரைமாதங்களிலும் அற்பமான குற்றங்களுக்குக்கூட ஒருவர் தூக்குத்தண்டனைக்காளாகவேண்டியிருந்தது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மீளப்பரிசிலனை செய்யப்படவேண்டுமென்றும் இவ் இயக்கம் கேட்கின்றது. இப்பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்தான் அவசரகாலச்சட்டம் அமுல்செய்யப்படுகிறதென்பதையும் இவ்இயக்கம் சுட்டிக்காட்டவிரும்புகின்றது.

வருங்காலத்தில் இத்தகைய சட்டங்களைத் தவறான வழியில் பிரயோகிப்டதைத் தவிர்த்து மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும்படி அரசாங்கத்தை இவ்வியக்கம் வேண்டுகின்றது.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டபோதும் அதன் அம்சங்களை உள்ளடக்கிய இரண்டு சட்டமூலங்கள் தற்பொழுது நாட்டில் அமுலிலுள்ளமையையும் இலங்கை ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது, அச்சட்டமூலங்களாவன:

(1) பயங்கரவாத பாதுகாப்புச் சட்டம்.

(2) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், அதை ஒத்த இயக்கங்களையும் தடைசெய்வதற்கான சட்டமூலம்.

இத்தகைய சட்டமூலங்கள் ஒருவரை எந்தவித விசாரணைக்கும் உட்படுத்தாது நீண்ட காலங்களுக்கு தடுப்புக்காவலில் வைப்பதற்கு வழிவகுக்கின்றன. இச்சட்டமூலங்களின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்பதையும் இவ் இயக்கம் எடுத்துக்காட்டுகின்றது.

இத்தகைய சட்டமூலங்கள் தொடர்ந்து அமுலிலிருப்பதன் மூலம் அவை பலாத்காரமான முறையில் பிரயோகப்படுத்தப்படலா மென்பதையும் இவ் இயக்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது. வடபகுதியில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டமையையிட்டு இலங்கை ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் மகிழ்ச்சியடைகிறதென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வெ)

# இன்றைய பலன்

தை மாதம் 3-ம்திகதி
வியாழக்கிழமை
17-1-1980

மேடம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள், தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்களைப் பெற இடமுண்டு, புத்திர விருத்தியுமுண்டு.

இடபம்:- மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், பிணிக்கு இடங்கொடாது இருக்கவும்.

மிதுனம்:- இல்லத்தில் இனிமை மலரும், நேர்மை வழி நிற்பீர்கள், வெளியூர்ப் பயணமும் உண்டு.

கடகம்: தொழிலில் தொல்லை தோன்றும். மாணவர்கள் உணர்ச்சி வசப்படாதிருக்கவும். போக்குவரத்து விடயத்தில் கவனம் வேண்டும்.

சிங்கம்: இன்று சுவைதரும் நிழ்ச்சிகள் இடம்பெறலாம். மேலிடத்து உறவும் உற்சாகத்தையளிக்கும். பிதாவழி உதவியும் உண்டு.

கன்னி: பெரியவர் ஆசியுண்டு. இயந்திரவளர்ச்சிக்கிடமுண்டு. கல்வித்துறையிலும் அபிவிருத்திதென்படும்.

துலாம்: தாராளமனப்பான்மை உருவர்கும். வரவில் உயர்ச்சியுண்டு. குடும்பத்தில் சுபகருமமும் இடம்பெறலாம்.

விருச்சிகம்: வழக்கு விவகாரங்களைத் தவிர்க்கவும். அவசரம் வேண்டாம். பொருள் விரையமும் உண்டு.

தனுசு: பழைய நினைவுகளால் உந்தப்படுவீர்கள். விரக்திநிலை மனதில் பதியும் உடல்நலக்குறைவுமுண்டு.

மகரம்: பணம் நிறைந்தசப்பவர்களுக்கிடமுண்டு. கைவிடப்பட்ட பொருளும் கிடைக்கக்கூடும். சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

கும்பம்: உணர்ச்சிமயமான தினம். தூரத்துச்செய்தியொன்று கவலையை உண்டு பண்ணும். உடன்பிறந்த சகோதரக்கவலைக்கும் இடமுண்டாம்.

மீனம்: எழுத்தாளர்களுக்கு புகழ்பரவும். திரவியலாபமும் உண்டாகலாம். முன்னேற்றமான நாள்.

திருமலை
க.வேலுப்பிள்ளை

......

# ரூ.ஒன்றேமுக்கால் லட்சம் பால் மா அன்பளிப்பு

(கொழும்பு)

உலக உணவு விவசாய ஸ்தாபனம் ஒன்றே முக்கால் லட்சம் ரூபா பெறுமதியான பால்மாவைஇலங்கை அரசாங்கத்திற்கு இன்றுஅன்பளிப்பாக வழங்குகிறது.

வர்த்தகசப்பல்துறை அமைச்சர் திரு.லலித்அத்துலத்முதலி அன்பளிப்பைப் கையேற்பார்.

வெலிசறைபால்மாத்தொழிற்சாலை தீ விபத்துக்குள்ளானதன்பின்புஉலகஉணவுவிவசாய ஸ்தாபனம் இலங்கைக்கு பாலமாவை அன்பளிப்பாக வழங்கியிருப்பதுஇதுவேமுதல்தடவையாகும்

(வெ)

......

## தேசிய...

( 3-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்புகளை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இந்த வகையில் திரு. சனகரத்தினம் எடுத்துள்ள முயற்சி ஒரு தேசிய முயற்சியாக அமையும் என்றார்.

கலாநிதி சண்முகதாஸ் தமது தலைமையுரையில்: இம்மாதிரியான முயற்சிகள் என்றோ ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அரசியல் நிகழ்ச்சிகளைக் கொஞ்சம் மறந்து மனிதாபிமான முறையிலே இந்த இலக்கிய பரிவர்த்தனையைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றார்.

திரு. சிவநேசச்செல்வன் தமது வெளியீட்டுரையில் சிங்கள நூல்களைப்பற்றி அறிய சிங்கள, பௌத்த மடாலயங்களில் முயற்சி எடுக்கப்படுகின்றது. அவர்கள் கொண்டிருக்கும் ஆர்வம் தமிழ்மக்கள்மத்தியில் இல்லை.

இந்தியாவில் இந்தப் பரிவர்த்தனை முயற்சிக்கு அரசே ஆக்கம் அளிக்கின்றது. இங்கே தனிப்பட்ட ஸ்தாபனங்களே இந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது என்றார்.

யாழ். மாவட்ட சிங்கள கல்விஅதிகாரி திரு. பெரேரா, சிங்கள மகாவித்தியாலய அதிபர் திரு. என், ஆர். சி. குணவர்த்தன ஆகியோரும் மற்றும் பலரும் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டன

வினுவிடைகள் A/L1980 ஏப்பிரல்
பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.
அளவையியல்
R. நவரட்ணம் B. A.
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
சாரதா ஸ்டோர்ஸ் & புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
V. P. P. மூலமும்
பெற்றுக்கொள்ளலாம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## ஏ.எஸ்.பி. நூர்தீனுக்கு பிடிவிருத்து

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கொலைவழக்கில் சாட்சியமளிக்கவேண்டிய ஏ. எஸ். பி. நூர்தீன் வராமையால் அவருக்கு பிடிவிருந்து விடுக்கப்பட்டது.

மேற்படி கொலைவழக்கில் சாட்சியமளிப்பதற்காக முன்பு யாழ்ப்பாணத்தில் ஏ, எஸ். பி.யாக இருந்தவரும் இப்பொழுது பண்டாரவளையில் ஏ. எஸ், பி. யாக இருப்பவருமான ஏ. எஸ். பி. க்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் நேற்று நீதிமன்றத்தில்ஆஜராகவில்லை

## இந்திய - பாக் கிரிக்கட்

(சென்னை)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சென்னை சேம்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் கிரிக்கட் போட்டியில் டெஸ்ட் 2-வது நாளான நேற்று இந்தியா தனது முதல் இனிங்ஸில் 4 விக்கட்டுகளுக்கு 161 ஓட்டங்கள் எடுத்திருந்தது சுனில் காவஸ்கர் 92 ஓட்டங்ளுடனும் ஜஸ்பால் சர்மா ஒரு ஓட்டத்துடனும் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

முன்னதாக பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 272 ஓட்டங்களை எடுத்திருந்தறது.

அன்னபூரணம் கொலை வழக்கு:

# "எதிரி கடைக்குவரும்போது வெள்ளைச் சேட்டும் வேட்டியும் அணிந்திருந்தார்"

## நகைக்கடைக்காரர் சாட்சியம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்தில் 'ஜிப்சி' ஒன்றினை அடையாளம் காட்டினேன். இதே போன்ற ஒரு ஜிப்சியைத்தான் எதிரி கொண்டுவந்துதந்தார். 12 வருடம் வேலைசெய்கின்றேன். நல்ல அனுபவம் உண்டு. ஒருமுறை கண்டவுடன் அடையாளம் காட்டுவேன். வாக்குமூலம் கொடுத்தன்று அடையாளம் காட்டினேன் எதிரி கோட்டில் நிற்கிறார்.

சாவகச்சேரி அரிசிக்கடைக்குப் பக்கத்தில் எனது நகைக்கடை இருக்கிறது. அதற்கு பெயர்பலகை போடவில்லை.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். வேலாகேஸ்வரன் குறுக்குவிசாரணை செய்தார்.

கே. நீர் கள்ளநகை வியாபாரம் செய்கின்றீர்?

ப. இல்லை.

கே. உமது கடைக்கு விளம்பரப் பலகை இல்லை?

ப. ஆம்.

கே. கடையில் றிசீட் புத்தகம் உண்டா?

ப. ஆம்.

கே. ஆபரணங்களைச் செய்து கொடுப்பீர்?

ப. ஆம்.

கே, பழைய பவுண்களை வாங்குவீர்?

ப. தேவைப்பட்டால் வாங்குவேன்.

கே. பழைய பவுண் வாங்குவதெனின்ல் என்னசெய்ய வேண்டும்?

ப. றிசீட்போட்டு கொடுக்க வேண்டும்.

கே. யார் நகை வாங்கியது?

ப. நான்தான்.

கே. விற்றவருக்கு றிசீட் கொடுக்க வேண்டும்.

ப, ஆம்.

கே. அவரிடம் றிசீட்டில் கையெழுத்து பாங்கவேண்டும்.

ப. ஆம்.

கே. வாங்கிய பழைய நகை 2 கிழமைக்குள் உருக்க கூடாதென சட்டம் உண்டு?

ப. ஆம்.

கே. நீர் 2 கிழமைக்குள் நகைகளை உருக்கிவிட்டீர்?

ப. ஆம்.

கே. ஏன் அப்படி செய்தீர்?

ப, அப்பொழுது அப்படி கடுமையாக சட்டம் இல்லை.

நீதிபதி: சட்டத்தை கவனிக்காமல் இருந்தாரா?

ப. அப்படியில்லை.

### எதிரி வந்தரர்

சாட்சி குறுக்குவிசாரணையில் தொடர்ந்து கூறியதாவது:- 76 மார்ச் 9ம் திகதி எதிரி கடைக்கு வந்தார். வெள்ளை சேட்டும் வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார். பொலிசாருக்கு எதிரி அணிந்திருந்த உடைபற்றி சொல்லியிருப்பேன். மோதிரத்தை நான் தனியாக நிறுக்கவில்லை. ஜிப்சியையும் மோதிரத்தையும் சேர்த்து நிறுத்தேன்.

எதிரியின் சட்டத்தரணி: நீர் நல்ல அனுபவசாலி ஜிப்சியில் எத்தனை வகையுண்டு.

ப. 10 வகையுண்டு.

கே. எத்தனை வித ஜப்சியை நீர் செய்திருக்கிறீர்?

ப. நான்கைந்துவிதம்.

கே. உம்மிடத்தில் எத்தனை பேர் ஜிப்சிசெய்திருப்பார்கள்?

ப. 10 பேர்.

கே. ஒரே அளவில், ஒரே பற்றனில் செய்துகொடுப்பதுண்டா?

ப. உண்டு.

கே. இரண்டையும் தனித்தனியே அடையாளம் காட்டும் வல்லமை உண்டா?

ப. வல்லமை உண்டு.

கே. காட்டமுடியாது என்கிறேன்?

ப. காட்டலாம்.

கே. ஒரேமாதிரி இரண்டு ஜிப்சி செய்தால் வித்தியாசம் தெரியுமா?

ப. தெரியாது.

கே. அண்மைக்காலத்தில் அணியப்பட்டுவரும் நவீன ஆபரணம் ஜிப்சி?

ப. ஆம்.

கே. ஆனபடியால் பொலிஸ் நிலையத்தில் காட்டிய ஜிப்சியை திட்டவட்டமாக அடையாளம் காட்டமுடியாது?

ப. 10 நாட்களுக்கு முன் கண்டதால் அடையாளம் காட்ட முடியும்.

கே. சாவகச்சேரியில் பலர் அந்த அளவில், அமைப்பில் செய்திருப்பார்கள்?

ப சரியாக இருக்காது.

கே. அடையாளம் காட்டியது அதன் சோடியா?

ப. ஆம்.

கே. எதிரியிடம் பற்றுச்சீட்டுப் பெற்றீரா?

ப, இல்லை.

கே. நீர் பற்றுச்சீட்டு கொடுத்தீரா?

ப. இல்லை.

கே. மிச்சம் 17ரூபா கொடுத்ததற்கு ஆதாரம் உண்டா?

ப, இல்லை.

கே. இறந்தவரின் சகோதரனை தெரியுமா?

ப. இல்லை.

கே. ஆம். அவர் கடைக்கு வரவில்லை.

கே. 'றெடிமேட்' நகைகள் செய்து வைத்திருக்றீர்?

ப. ஆம்..

கே. நீர் ஒரு கள்ள நகை வியாபாரி.

ப. இல்லை.

கே, பொலிசார் அச்சுறுத்தியபடியால் அப்படிக் கூறினீர்?

ப. இல்லை.

ஜூரி. எதிரியை தெரியாது என்றீர் ஏன் றிசீட் வாங்கவில்லை.

ப. சின்ன சாமான்களுக்கு றிசீட் வாங்குவதில்லை. பெரிய நகைகளுக்குத் தான் வாங்குவதுண்டு.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

# பொதுமக்கள் ஒத்துழைப்பு குற்றச்செயல்கள் குறைவு

## உதவிப்பொலிஸ் அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தற்பொழுது பொதுமக்கள் பொலிசாருடன் ஒத்துழைத்து வருவதாகவும், இதன் மூலம் பெருமளவில் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கின்றது. இன்னும் கூடிய ஒத்துழைப்பைப் பொதுமக்கள் பொலிசாருக்கு நல்குவாரேயானுல் குற்றச்செயல்களை மேலும் ஒழிக்க உதவியாயிருக்கும்.

இவ்வாறு யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற பொதுமக்கள். பொலிசார் நல்லுறவு மாநாட்டில் உரையாற்றிய யாழ். உதவி பொலிஸ் அதிபர் திரு,ஹேரத் கூறினுர். இம் மகாநாட்டில் சட்டத்தரணிகளும், டாக்டர்களும், சனசமூகநிலையங்களின் பிரதிநிதிகளும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

திரு. ஹேரத் தொடர்ந்து உரையாற்றுகையில், பொதுமக்களின் வாக்குமூலங்களைத் தமிழில் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகளைத் தான் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ், தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, சந்திரா பெரேரா யாழ்ப்பாணத்தில் சைக்கில் திருட்டுக்களும், வீடுடைப்புத் திருட்டுக்களுமே தற்பொழுது பெருமளவில் இடம் பெற்று வருவதாக இம்மகாநாட்டில் தெரிவித்தார். இவற்றைத் தடுக்க வேண்டுமாயின் மக்களின் பூரண ஒதுழைப்புப் பொலிசாருக்குத் தேவையென்றும் அவர் கூறினுர்.

பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச் சங்கத்தவருக்கு ஒரு காரியாலயம் கொடுக்கப்படவேண்டுமென்றும்' அப்பொழுது தான் பொதுமக்கள் அவருடன் தொடர்புகொண்டு தமது பிரச்னைகளைப் பொலிசாருக்குத் தெரியப்படுத்த முடியுமென்றும் சட்டத்தரணி திரு. ஜிம்மி இராசரத்தினம் இம்மகாநாட்டில் தெரிவித்தார். இம்மாநாட்டில் பொலிசார், பொதுமக்கள் நல்லுறவுக்குழுவின் அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் திரு. மாணிக்கம், காரியதரிசி, திரு. கே. கணேசலிங்கம், ஏனைய அங்கத்தவர்கள் சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம், டாக்டர் சபாரத்தினம், திரு. எஸ். சிவநேசன், திரு. ஏ. தம்பித்துரை, திரு. எஸ். சி. செல்வராசா, திரு. திரு. சங்கரப்பிள்ளை, சட்டத்தரணி திரு.ஆர்.எம். இமாம், திரு. பொ்ஞன்டோ, பரமசுவம் ஆகியோராவர், (வெ)

## செங்கொடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவிற்கு கடிதம் எழுதியுள்ளது.

மறியல் செய்த தொழிற்சங்கத் தலைவர்களையும், தொழிலாளர்களையும் குண்டர்கள் தாக்கியதை வன்மையாகக் கண்டிப்பதாகவும், ஜனநாயக உரிமைகளைமீறும் நடவடிக்கைகளை எதிர்த்து போராடாவிட்டால் நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லுமெனவும் இச்சங்கம் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது,

## அமிரிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்ட சதிவேலைகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரித் தொகுதி இளைஞர்கள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திடம் நேற்றுமுன்தினப் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்வார முடிவில் தான் சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியரிடம் இதுபற்றிப்பேசி முடிவெடுப்பதாக அவர் இளைஞர்களுக்கு வாக்குறுதியளித்தார்.

## திருக்கேஸ்வரத்தில்

(இமையாணன்)

திருக்கேஸ்வரம் தை அமாவாசைத்தீர்த்தோற்சவம் இன்று பாலாவியில் நடைபெறவிருக்கிறது.

விஸ்வகுல மக்கள் நடத்திவரும் இவ்வுற்சவத்தை வழமைபோல் இம் முறையும் மிகச்சிறப்பாக நடத்தவிருப்பதுடன் விசேட அன்னதானமும் வழங்க விருக்கின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் மாவுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சிலதினங்களாக கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கான சரியான காரணம் தெரிவிக்கப்படவில்லை. நேற்று யாழ். நகரில் வேறுபகுதிச் சங்கத்துக்குரிய மாமூடைகள் தனியார் கடையொன்றில் இறக்கப்பட்டதாகவும் இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு ஒருசங்கத்தின் பொறுப்புள்ள ஒருவர் தொலைபேசியில் அறிவித்தும் நேற்றுமாலைவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனக் கூறப்படுகிறது. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுச் சங்கத்திக்கு மூன்றில் ஒருபகுதி மாதான் வழங்கப்படுகிறதாம்.

சீனிவிநியோகத்திலும் சங்கங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

## விக்டோறியா கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

விக்டோறியகல்லூரி இந்து மாணவர் சங்கம் இன்று சைவப்பெரியாரின் 102 - வது நிறைவு தினத்தைக் கொண்டாடுகின்றது இந்த விழாவில் மலேஷிய சைவப்பெரியார் நூற்ருண்டு விழாக்குழு செயலாளரும் மலேஷிய கல்வி திணைக்கள ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியுமான திரு. எஸ். சிவராஜா பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார்.

......

## புத்தக விநியோகம்

நல்லூர் வட்டாரப்பாசாலை மாணவர்க்கு இல்வச பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் விழா நாளை முற்பகல் 8.45 மணிக்கு யா[நல்லூர் ஸ்தான சி'சி. த,க.பாடசாலையில்நடைபெறவுள்ளது.

திரு,த.இராசேந்திரம் இவ் விழாவிற்கு தலைமைவகிப்பார். இவ் விழவில்திரு.மு.சிவசிதம்பரம் நல்லூர் எம்.பி,திரு.தி மாணிக்கவாசகர் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர், திரு.க சிவ ாதன்வடமானிலமேலதிக கல்விப்பணிப்பாளர் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக்கலந்து கொள்வார்கள்

(வெ)

## தி.மு.க......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள புதிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று திரு. கருணுநிதி கூறினுர். எதிர்வரும் பட்ஜட் விவாதத்தின்போது தாம் இந்தப் பிரச்னையை சட்டப்பேரவையில் கிளப்பப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.


### கல்வி

க. பொ. த. (உயர்தரம்) 1980-ம் ஆண்டிற்குரியது மீட்டல் வகுப்புகள் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் 1981-ம் ஆண்டு விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன. 1980-ம் ஆண்டு மார்கழி G.C.E. (O/L) வகுப்புகளும் 9-ம், 8-ம், 7-ம் வகுப்புகளும் தினசரி மாலை நேரங்களில் நடத்தப்படவுள்ளன. வகுப்பில் 40 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். 30-01 - 80 க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். Selva Tuition Centre ஸ்ரான்லி வீதி (வெலிங்டன் தியேட்டர் முடிவில்) யாழ்ப்பாணம். 4679

இந்தியாவின் முன்னணி நிறுவனம் தொலைக்காட்சி குளிரூட்டல் ஆகிய துறைகளில் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ் வழங்குகின்றது. நான்கு மாத பாடநெறி எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம். முடிவு திகதி 30-01 - 80 செல்வா டியூசன் சென்ரர், ஸ்ரான்லிவீதி (வெலிங்டன் தியேட்டர் முடிவில்) யாழ்ப்பாணம். 4678


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org